# விடியல்

The Dawn மாதஇதழ்

பொழுது - 44, டிசம்பர் 2012



உலக எய்ட்ஸ் நோய் ஒழிப்பு தினம்

KSR COLLEGE OF ARTS AND SCIENCE INDIA
*Knowledge is Power*

சென்னை, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் நிதி நல்கையுடன்
திருச்செங்கோடு, கே.எஸ்.ஆர். கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறையில்
தொல்காப்பியம் கற்பித்தல் உத்திகள் என்னும் தலைப்பில்
20 வல்லுநர்கள் பங்கேற்று 40 அமர்வுகளில்
பத்துநாள் பயிலரங்கம்
21.01.2013 முதல் 30.01.2013 வரை நடைபெற உள்ளது.

CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL

சன் பிரிண்டர் - தி.கோடு. செல்: 97500 20222

தனிச்சுற்றுக்கு மட்டும்

Vidiyal - 44 - Dec 2012

# விடியல்

The Dawn

*மாத இதழ், பொழுது – 44*
*டிசம்பர், 2012*
பக்கங்கள் - 32, தனிச்சுற்றுக்கு மட்டும்



*சிறப்பாசிரியர்*
முனைவர் நா. கண்ணன்
கல்லூரி முதல்வர்

*ஆசிரியர்*
முனைவர் மா. கார்த்திகேயன்
தமிழ்த்துறைத் தலைவர்

*இணை ஆசிரியர்*
முனைவர் ப. சரவணன்
தமிழ் விரிவுரையாளர்

*ஆசிரியர் குழு*
தமிழ் விரிவுரையாளர்கள்
அனைவரும்



*வெளியீடு:*

தமிழ்த்துறை

கே.எஸ்.ஆர். கலை அறிவியல் கல்லூரி
(தன்னாட்சி)
திருச்செங்கோடு – 637 215,
தமிழ்நாடு, இந்தியா.
fb: facebook.com/ksrcasthamizh.vidiyal
Blog: ksrcasthamizh.blogspot.in
Email : vidiyalmagazhine@gmail.com
Website: ksrcas.edu



© **K.S.R. College of Arts and Science (Autonomous)**

All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted, in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of the publisher.


# உள்ளடக்கம்

## கட்டுரைகள்


*மழைநீர் சேகரிப்பு 04, மார்கழி 07, சிலம்பின் சிறப்புகள் 08, எய்ட்ஸ் 22,*


## கவிதைகள்


*கிறித்துமஸ், கந்தர்வக் கன்னி 02, இந்தியன் 02, மின்னல் 03, மழை, மழையின் கடிதம் 06, மழைக்குப் பின் 07, காற்று 12, என் தெருவோரம் நிற்கும் மரம் 12, காமராசர், கல்லூரிக்கனி 13, காடுகளைக் காப்போம் 13, சுதந்திரச் சாபம், காந்தி 14, ஆசிரியர்கள் 15, ரோஜாமலரே 15, மாதங்களில் ஒரு கல்யாணம் 15,*


## சங்கச் சாரல் - 10


*கொங்குதேர் வாழ்க்கை 28*


## இசை நினைவுகள் - 02


*எம்.எஸ். சுப்புலட்சுமி 18*


## நடுப்பக்க ஓவியங்கள் - 16-17


*சி. தேன்மொழி மற்றும் பி. ஹேமலதா*
*இளங்கலை கணிதம் முதலாண்டு ஆ பிரிவு*

## குறிப்புகள்

டிசம்பர் மாதம் முதல்நாள் உலக எய்ட்ஸ் நோய் ஒழிப்பு தினமாகும். அது தொடர்பான செய்தியை இந்த இதழில் வெளியிட்டுள்ளோம்.

பனிக் காலத்தை வரவேற்கும் விதமாக அட்டைப்படத்தினை உருவாக் கியுள்ளோம்.

பல மாணாக்கர்கள் ஓவியத்தை கருப்பு-வெள்ளை நிறங்களில் வரைவதனால் அவற்றை விடியல் இதழின் நடுப்பக்கத்தில் வெளியிட்டுள் ளோம்.

மாணாக்கர்களுக்குப் பருவத்தேர்வு தொடங்கியிருப்பதால், அவர்கள் இப்பருவத்தேர்வில் நன்மதிப்பெண்கள் பெற்று வெற்றிபெற 'விடியல்' அவர்களை வாழ்த்துகிறது.

அனைவருக்கும் கிறித்துமஸ் மற்றும் ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துகள்.

- இணையாசிரியர்

## கிறித்துமஸ்

*"அம்புலி புன்னகைத்து விலக*
*இரவு உறங்கியது.*
*தென்றல் மென்மையாய்த் தவழ*
*உன் குளுமையில் பிறந்தது*
*இறைவனின் குட்டிச் செல்வம்*
*தொழுவத்திலே!*
*வானத்தில் உள்ள விண்மீன்*
*வந்து முத்தமிட்டது போல்*
*உன் பிஞ்சுக் கால்கள் மண்ணில்*
*முத்தமிட்டுப்பதிய*
*காலம் இரண்டாகப் பிளந்தது*
*கி.மு. கி.பி. ஆக."*

*எஸ். ராஜேஸ்வரி*
*இளங்கலை வேதியியல் முதலாண்டு*

## கந்தர்வக் கன்னி

*"ஏ மின்னலே!*
*பூமித்தாயின் அழகில் மயங்கி*
*அவளைப் பட எடுக்கிறாயா?*
*ஒரு படம் போதாதோ!*
*ஏன் ஓராயிரம் படம் எடுக்கிறாய்?*
*உன் நிழற் படத்தில்*
*அவள் நிஜமாகமாட்டாள்.*
*அவள் கந்தர்வக் கன்னி."*

*த. சுசித்தா*
*இளங்கலை கணினி அறிவியல்*
*முதலாண்டு ஆ பிரிவு*

## இந்தியன்

*"சுதந்திர பூமியில்*
*சுதந்திரம் இல்லை.*
*விடுதலை பெற்றபின்*
*விடியலும் இல்லை.*

*தீமைகள் சேர்ந்திங்கு*
*தீண்டிடும்போது*
*ஒன்றாகச் சேர்ந்ததை*
*ஒழித்திட முனைந்தோம்.*

*வெற்றியின் ஊஞ்சலில்*
*ஏறிட்ட பின்பு*
*உனக்கென எனக்கெனப்*
*பங்கிட விழைந்தோம்.*

*எருதுகள் சிங்கத்தின் கதையினைப்*
*படித்தும் ஏனிங்கு இத்தனைப்*
*பரிவுகள் அமைத்தோம்.*
*சாதிகள் சமயங்கள்*
*பலவற்றைப் படைத்தோம்.*

*சாமிகள் தெய்வங்கள்*
*பெயர்களைக் கெடுத்தோம்.*
*நீருக்கும் சோறுக்கும்*
*போர்க்களம் அமைத்தோம்.*

*நாட்டிற்குள்ளே பல*
*விஷயங்களை விதைத்தோம்.*
*பாரத அன்னையின்*
*மடியிலா பிறந்தோம்.*
*இந்தியர் என்பதை*
*என்றுநாம் மறந்தோம்?*

*செய்பவைத் தவறென*
*ஏற்றுக் கொள்வோம்.*
*நம்மை அவை தவிர்த்திடும்*
*வழிகளைக் கேட்டுக் கொள்வோம்.*

*காந்திய நெறிகளில்*
*தேற்றிக் கொள்வோம். நம்மை*
*அகிம்சையின் திசைகளில்*
*தீட்டிக்கொள்வோம்.*

*பாம்புகள் போலிங்கு*
*வாடிட வேண்டாம் - ஒளி*
*மாணிக்கமாய் நம்மை*
*மாற்றிக் கொள்வோம்."*

*எம். விவேக் குமார்*
*இளங்கலை வணிகவியல் கணினிப்*
*பயன்பாடு இரண்டாமாண்டு ஆ பிரிவு.*

# மின்னல்

*"விதி சொன்ன பாதையில்*
*தனிமையில் நான் செல்கையில்*
*கண்ணில்பட்ட சாட்சியென்றால்*
*கண்கொட்ட மறந்து நின்றேன்.*

*கண்ணில் பட்ட வெளிச்சம்*
*போல் கண்கள் கூசுகின்றன.*
*கண்ணிமைக்கும் நேரத்தில்*
*காணமால் மறைந்து சென்றாய்"*

*சா. பூவித்தா*
*இளங்கலை கணினி அறிவியல்*
*முதலாண்டு ஆ பிரிவு*

# மழைநீர் சேகரிப்பு

*எஸ். ராஜேஸ்வரி*
*இளங்கலை வேதியியல் முதலாண்டு*

நமது வாழ்வில் நீர்த்தேவை அதிகமாக இருப்பதாலும் நமது நீர் வளங்கள் குறைவாக இருப்பதாலும் நீர் மேலாண்மைக்குத் தனிக் கவனம் செலுத்த வேண்டும். நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதும் நீர் ஆதாரங்களை அதிகரிப்பதும் நீர் மேலாண்மை எனப்படும்.

தெய்வப்புலவர், 'நீரின்றி அமையாது உலகு' என்றார். சிலப்பதிகாரம் தந்த இளங்கோவடிகள், 'மாமழை போற்றதும் மாமழை போற்றதும்' என்றார். இவ்வாறு நீரின் இன்றியமையாமையையும் நீர் தருகின்ற மழையின் சிறப்பினையும் தமிழ்ப் புலவர்கள் காலந்தோறும் போற்றி வந்துள்ளனர்.

அனைவருக்கும் அடிப்படைத் தேவை தண்ணீர் என்று சொல்வது மிகையில்லாத உண்மை. மேலும், ஒரு நாட்டினுடைய வலிமையும் பெருமையும் கூட நீர் வளத்தால் கணிக்கப்படுகிறது. இதற்கு மாற்று என்பது இல்லாத காரணத்தால் தண்ணீரை நாம் ஒரு தாய்க்கு ஒப்பாகக் கூறலாம். ஓரிடத்தில் மக்கள் வாழ தொடங்குவதும் வாழ்க்கையைத் தொடருவதும் அங்குள்ள நீர் வசதியைக் கொண்டுதான் என்று சொன்னால் அது மிகையாகாது.

**தண்ணீருக்கு ஆதாரம்**

குடிநீர் இல்லையென்றால் குடியிருப்பும் இல்லை. நீரில்லாத போதுதான் இன்னலும் இடம் பெயர்தலும் ஏற்படுகின்றன. தவிக்கிற மக்களுக்கு மிகவும் தேவைப்படுவது தண்ணீரே. தாயிற்சிறந்ததொரு கோவிலும் இல்லை என்பது போல தண்ணீரிலும் சிறந்ததொரு உயிர்க்காப்பும் இல்லை எனலாம்.

**சேமிக்கும் முறை**

பயிரிடும் முறைகளை மாற்றியும் பாசன வழிமுறைகளை மாற்றியும் நீரைப் பயன்படுத்துகின்ற முறையினையும் மாற்றிப் பெரிய அளவில் நீரைச் சேமிக்கலாம். ஏரி, குளங்கள் ஏற்ற முறையில் பாதுகாத்து நீர் வழிகளை அடைக்காமல், பரவலாகப் பெய்கின்ற மழைநீர் முழுவதும் நீர்நிலைகள் வந்தடைய ஆவன செய்ய வேண்டும். வீடுகளில் மழைநீரைச் சேமிப்பதற்குச் சேமிப்புத் தொட்டிகளை அமைத்து வீட்டைச் சுற்றியுள்ள பகுதிகளை

மெழுகிய தளமாக மாற்றாமல் மணற்பாங்காகவோ இயல்பான நிலப்பரப்பாகவோ விட்டுவிடுதல் வேண்டும். மாடியில் விழுகின்ற மழைநீரைக் குழாய்கள் மூலம் தரைப்பகுதிக்கும் கொண்டு வந்து கிணற்றுக்குக்கும் வீட்டுச் சுவருக்கும் இடையிலுள்ள நிலப்பகுதியில் ஒரு தொட்டி அமைத்துச் சேமிக்கலாம். கிணறுகள் இல்லாத வீடுகளில் சிறுகால்வாய் மூலம் வடிகட்டும் தொட்டிக்குள் மழைநீரைப் பாய்ச்சி அங்கிருந்து கசிவு நீர்க் குழாய் வாயிலாகக் குழாய்க் கிணற்றுக்குள் செலுத்திச் சேமிக்கலாம்.

**அணைகள், நீர்த்தேக்கங்கள் மற்றும் கால்வாய்கள்**

மழைநீரைச் சேமிக்க ஆங்காங்கே அணைகள் போன்றத் தேக்கங்களைக் கட்டி மழைநீர் கடலில் சென்று கலந்து வீணாக்காமல் சேமித்தல் ஒரு சிறந்த நடைமுறை ஆகும். தேவையான இடங்களுக்கு நீர்த்தேக்கங்களிலிருந்து கால்வாய்கள் மற்றும் குழாய்களின் மூலம் எடுத்துச் சென்று பயன்படுத்த வேண்டும்.

**நீர்ப்பிரிமுகடு மேலாண்மை**

வரிசையாக அமைந்துள்ள சிறுசிறு அணைகள் அல்லது ஏராளமான நதிநீர்க் கிணறுகள் ஆகியவை மூலம் தண்ணீர் வீணாகாமல் நீர் தேக்கி வைக்கப்படுதலே நீர்ப் பிரிமுகடு எனப்படும்.

**மழைநீர் சேகரிப்பு**

மழைநீர் வீணாகிவிடாமல் நிலத்துக்குள் அதனைச் செலுத்திச் சேமிப்பதை மழைநீர் சேகரிப்பு என்கின்றனர். நிலத்தடி நீர் குறைவதைத் தடுக்கவும் நீர் வளத்தைப் பெருக்கவும் நீரின் தரத்தை உயர்த்தவும் கடலோரப் பகுதிகளில் கடல்நீர் நிலப்பகுதியின் கரையைத் தாண்டி உட்புகுவதைத் தடுக்கவும் நிலத்தடி நீரைச் சேமிக்கிறோம். பக்குவமாகச் சேமித்துச் சிக்கனமாகச் செலவு செய்வது அறிவார்த்த செயலாகும்.

**மழை நீரின் நன்மை**

மழை பொழிவதன் மூலம் நாட்டின் வறட்சி நிலைமைமாறி நாடே பசுமையாகத் தோற்ற மளிக்கும். வயல்வெளிகளில் பயிர்கள் நன்கு செழித்து வளர மழை நீர் அவசியமானதாகும். மழை பொழிவதன் மூலம் கடல்நீரின் மட்டம் உயரும். அதுமட்டுமன்றிக் கிணறு, ஏரி, குளம், ஆறு போன்ற நீர்நிலைகளில் நீரின் மட்டம் உயரும். மழை பொழிவதால் மூலம் நிலத்தடி நீர் மட்டம் உயரும்.

இதன் மூலம் நிலநடுக்கம், கடற் கொந்தளிப்பு போன்ற இயற்கைச் சீற்றங்கள் தடுக்கப்படுகின்றன.

**மழைநீரின் பயன்கள்**

பெய்த மழைநீரைத் தகுதியான வழியில் தேக்கிப் பாதுகாப்பதால் நீர் வளத்தைப் பெருக்கலாம். இயற்கை வளங்களைப் பெருக்கிச் சுற்றுச்சூழல் பாதுகாப்பையும் மாசுக்கட்டுப்பாட்டையும் பெறலாம். வளிமண்டல ஓசோன் படலம் பாதிக்கப்படாமல் காக்கலாம். அடை மழையினால் புறநகர்ப் பகுதிகளிலும் கிராமப்புறப் பகுதிகளிலும் மழைநீர் வெள்ளமாய்ப் பெருக்கி வீணாவதைத் தடுக்கலாம். வறட்சிக் காலத்தில் சேமித்த மழைநீரைக் கொண்டு நாம் வாழலாம்.

## மழை

*"குழந்தையாக இருந்தபோது*
*அழுதது பசிக்காக.*
*பள்ளிப் பருவத்தில் அழுதது*
*ஆசிரியர் அடித்ததற்காக.*
*கல்லூரிப் பருவத்தில் அழுதது*
*தோழிகளைப் பிரிந்ததற்காக.*
*இப்போது அழுவது*
*இந்த வெயிலில் இருந்து விடுபட -*
*மழையே நீ வருவதற்காக"*

*ச. சௌமியா*
*இளங்கலை ஆங்கிலம் முதலாண்டு*

## மழையின் கடிதம்

*28.11.2012.*
*வானும் மண்ணும்.*

*"வணக்கம்!*
*'உன்னைவிட்டுப்*
*போகப் போகிறேன்' என்று*
*நான் சொன்ன நாள் இது.*
*ஆம், நான் போகிறேன்.*
*என் பிரிவைத் தாங்காது*
*இடி அலறுகிறது.*
*மின்னல் தவிக்கிறது.*
*நீங்களும் என்னுடன்*
*வந்து விடாதீர்கள்.*
*என் வரவை எதிர்பார்க்கும்*
*மனிதர்கள் மடிந்துவிடுவார்கள்.*
*உன்னைவிட்டு நான்*
*தொலைவில்தான் போகிறேன்.*
*எதனையும் தொலைத்து*
*விட்டுப் போகவில்லை.*
*நமக்கு இடையில்*
*காதல் இல்லையெனினும் நமக்கு*
*ஏன் இந்தத் தவிப்பு*
*இதன்பேர்தான் நட்போ!*
*நன்றி! இப்படிக்கு,*
*மழைத்துளி"*

*சு. தீபா*
*இளங்கலை கணினி அறிவியல்*
*முதலாண்டு ஆ பிரிவு*

## மழைக்குப்பின்

*"மழை நின்ற பொழுதில்*
*பூக்கள் சுமக்கும்*
*நீர்ப் பருக்களை*
*மெல்ல உதிர்கிறது காற்று.*

*மடக்கப்பட்டக்*
*குடையை ஊன்றி*
*நடக்கிறார் ஒரு முதியவர்.*

*பள்ளத்தில் தேங்கிய*
*நீரில் கடக்கின்றன*
*புதிய மேகங்கள்.*

*குப்பையிலிருந்த*
*நனைந்த காகிதங்களை*
*எடுத்து உதறுகிறான்*
*ப்ளாஸ்டிக் சாக்கோடு நிற்கும்*
*சிறுவன்.*

*ஓடை நீரின் சலசலப்புடன்*
*மழையே நீ மீனாக*
*உலா வருகிறாய்.*
*காத்திருக்கும் கொக்காக*
*என் கரையோரக் கவிதைகள்."*

*க. மோகன் ராஜ்*
*இளங்கலை வேதியியல் முதலாண்டு*

## மார்கழி

நம்முன்னோர்கள் இறைவழிபாடு என்ற பெயரில் அதிகாலையில் குளித்து, வாசலில் கோலமிட்டு, மார்கழிநோன்பினை நோற்று, இறைவனைத் தரிசிக்கக் கோயி லுக்குச்செல்வர். அது சிறந்த சுவாப் பயிற்சிக்கும், உடற்பயிற்சிக்கும் சோம்பலுக்கு எதிரான நடவடிக்கை யாகவும் இருக்கும். நரம்புகள், இரத்த நாளங்கள் புத்துணர்ச்சி பெறும்.

மார்கழி மாதத்தில் அதி காலையில் வளிமண்டலத்தில் தூய்மையான ஓசோன் படலம் பூமிக்கு மிகத்தாழ்வாய் இறங்கி வரும். அப்போது நாம் காற்றினைச் சுவாசித்தால் நோய் எதிர்ப்பு சக்தியும் ஆரோக்கியமும் கிடைக் கும். மார்கழி மாதம் முழுவதும் வாசலில் வண்ணக்கோலமிட்டு அதன் நடுவில் பசுஞ்சாண உருண் டையை வைத்து அதில் பரங்கிப் பூவினை வைப்பர். இது கிருமி நாசினியாகப் பயன்படுகின்றது.

முன்னோர் வழக்கங்கள் மூடநம்பிக்கைகள் அல்ல. அறிவியல் சார்ந்த வாழ்வியல் நுணக்கங்கள்.

*எம். சௌந்தர்யா,*
*இளங்கலை வேதியியல் முதலாண்டு*

# சிலம்பின் சிறப்புகள்

கா. நித்யா
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

உலகில் சிறந்த புலமைக்கும் பிறநாட்டார் வணக்கத்திற்கும் சான்றாகத் திகழ்வது திருக்குறள். அதற்கு நிகரான இறவாப் புகழுடைய மற்றொரு நூல் சிலப்பதிகாரம்.

தமிழ் இலக்கிய உலகிலும் தமிழ்க் காப்பிய உலகிலும் சிலப்பதிகாரம் தனிச்சிறப்பிடம் பெற்றுள்ளது. முதன் முதலில் தமிழ்த்தேசியம் பேசிய நூல் சிலப்பதிகாரமாகும்.

தமிழரின் அரசியல், பண்பாடு, சமயம், மரபு, குடும்ப வாழ்க்கை, சமுதாய வாழ்க்கை போன்றவற்றை விளக்குவதே சிலப்பதிகாரத்தின் நோக்கமாகும். இந்நோக்கங்களின் அடிப்படையில் சிலப்பதிகாரம் பல சிறப்புகளை பெற்றுள்ளது. அவை குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

**அறநெறிகள்**

காப்பியம் மிக உயர்ந்த தன்னிகரற்ற தனித்ததோர் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டும்.

***"அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்று ஆவதூஉம்***
***உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்***
***ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதூஉம்"***

என்னும் முப்பெரும் நோக்கங்களின் அடிப்படையில் சிலப்பதிகாரம் அமைந்துள்ளது. உரைசால் பத்தினித் தெய்வத்தை உயர்ந்தோ ரெல்லாம் வணங்கவேண்டும் என்பதே சிலப்பதிகாரத்தின தலையாய நோக்கமாகும். மற்ற இரண்டும் இதற்கு துணைநிற்பதாக அமைகின்றன.

நன்னெறி நில்லாதவர்களுக்கு நல்லோர் துணையோடு நற்கதியும் கிட்டாது. மெய்நெறிகளில் மேம்பட்டு நின்று உலக உயிர்களைப் பேணிக் காப்போருக்கு எல்லாம் எளிது. கணிகையர் வாழ்வு பிணிமிகு வாழ்வு. கற்றுணர்ந்த பெரியோர் காலந்தரும் தொல்லைகளுக்கும் பற்றே காரணம். பசிப்பிணி அறுத்தலே இல்லோர் கடன். பத்தினிப் பெண்டிர் உள்ள நாட்டில் வானம் பொய்யாது. வளம் பெருகும். நீதி நிலைக்கும். செல்வத்துப் பயனே ஈதல். கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல். முற்பகல் செய்யின் பிற்பகல்

விளையும். மன்பதை காக்கும் நற்குடிப் பிறத்தல் துன்பமல்லது தொழுதகவு இல். பிறத்தலும் இறத்தலும் தீதும் நன்றும் உயர்வும் தாழ்வும் புதுவதன்று எனப் பல நீதிகளையும் கூறியுள்ளது.

### முழுமுதற்காப்பியம்

தமிழில் கதைசொல்லும் முதல் நூல் சிலப்பதிகாரம் ஆகும். வரிவடிவம் பெற்றுள்ள இந்திய மொழிகள் பலவற்றுள் தோன்றியுள்ள முதற்காப்பியங்கள் எல்லாம் பாரத இராமாயணத் தழுவல்களாக விளங்கச் சிலப்பதிகாரமோ தமிழ்மொழியில் முகிழ்த்த முதற்காப்பியமாக விளங்குவதோடு முதனூல் காப்பியமாகவும் விளங்குகிறது. ஆகவே, இதனைத் தமிழின் முதற்காப்பியம் என்றும் முதன்மைக் காப்பியம் என்றும் போற்றுவர்.

"தமிழ் மண்ணில் மலர்ந்து, தமிழர் நெஞ்சில் மணம் பரப்பும் காவிய மலரால் சிலப்பதிகாரம் தன்னேரில் லாதது" என்றும் " காப்பியம் என்பதில் கதை அமைப்பு இருக்க வேண்டும். அக்கதை மாண்புடைய தாகவும் சிறப்புடையதாகவும் அமைவதோடு சொல்லப் பெறுகின்ற முறையிலும் சிறந்து கற்பார்தம் நெஞ்சில் நிலைத்து இடம்பெற வேண்டும்" என மேலைநாட்டார் வகுத்துரைக்கும் காப்பிய இலக்கணத்திற்கு நம் தண்டமிழ்ச் சிலப்பதிகாரம் தக்கதொரு சான்றாய் மிளிர்கின்றது.

### புதுமைக் காப்பியம்

புலவர் மன்னரைப் பாடிய முறைமையை மாற்றி மன்னர் வழித்தோன்றலால் மக்களுள் சிறந்தோரைக் காவிய மாந்தராக்கிப் பாடிய புதுமையை உடையது சிலப்பதிகாரம். இது இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழையும் தன்னகத்தே கொண்டது. தமிழிசையின் தொன்மையினை, சிறப்பினை வெளிச்சமிட்டுக் காட்டக்கூடியது. தமிழரின் அகம், புறம் சார்ந்த வாழ்க்கையின் கருவூலமாகவும் காலக் கண்ணாடியாகவும் திகழ்கிறது சிலப்பதிகாரம். இந்நூல் மட்டுமே தமிழில் எழுந்த தழுவலற்ற தனிச்சிறப்புடையக் காப்பியம்.

சங்க காலத்தில் அகவற்பா மேம்பட்டிருந்த நிலையை மாற்றிப் புதிய வகைப்பாக்களை உருவாக்க வேண்டும் என்பதை நினைவில் கொண்டும் பிற காப்பியங்களைப் போலப் பிறப்பி லிருந்து தொடங்காது திருமணத் திலிருந்து

கதையைத் தொடங்குகிறது. நடுகல் வழிபாடு வீரர்களுக்கு உரியது. அதனைக் கற்புக்கரசிக்கும் உரியதாக மாற்றினார். இவ்வகையில் சிலப்பதி காரம் ஒரு புதுமைக்காப்பியம் ஆகும்.

**புரட்சிக்காப்பியம்**

பெண்ணைக் காப்பியத் தலைவி யாக்கிப் பெருமைப்படுத்தியதால் இது பெண்ணின் பெருமைக் காப்பியம் எனப்படும். கற்புக்கரசியின் காப்பிய மாதலால் பத்தினிக் காப்பியம் என்று பெயர் பெறும்.

உயர்ந்த காப்பியம் பெற வேண்டிய அத்தனைச் சிறப்புகளையும் பெற்று கற்போர் உள்ளத்தையும் கதை கேட்போர் உள்ளத்தையும் கொள்ளை கொள்வதோடு அவர்களைச் சிந்திக்கத் தூண்டும் பேராற்றல் படைத்த காப்பியமாகச் சிலப்பதிகாரம் விளங்கி வருகின்றது.

பண்டியனைக் கண்ணகி தனியொருத்தியாக நின்று வழக்கில் வென்றமை, பரத்தையைப் புறக்கணிக்க மாதவி மணிமேகலை ஆகியோர் முடிவெடுத்தமை போன்றன சமுதாயப் போராட்டச் செயல்களாகும். எனவே, புறப்போராட்டமும் அகப் போராட்டமும் நிறைந்த இந்நூல் போராட்டக் காப்பியம் என்றும் புரட்சிக் காப்பியம் என்றும் போற்றப் படுகின்றது.

**தமிழ் இலக்கிய வரலாற்றின் திருப்புமுனை**

சங்க இலக்கியத்தின் பிழிவாக தமிழ் இலக்கியப் போக்கின் திருப்புமுனையாகச் சிலப்பதிகாரம் விளங்குகிறது. பக்தி இலக்கியங் களுக்குக் குன்றக்குரவை, ஆய்ச்சியர் குரவை, வேட்டுவ வரி ஆகியவை வழிகாட்டி. பிற்காலப் புனைக்கதைகளுக்கு முன்னோடி சிலப்பதிகாரக் கதையே. முன்னைய இலக்கியங்களுக்கும் பின்னைய இலக்கியங்களுக்கும் பாலமாகத் திகழ்வது சிலப்பதிகாரம். சிலப்பதி காரத்தைப் பொறுத்தவரையில் இளங்கோவடிகள் தம் திறனுக்கும் கதை அமைப்பிற்கும் ஏற்ற வகையில் புதிய வடிவ அமைப்பினைக் கொண்டாரெனினும் பழமையிலும் தொடர்பு கொண்டு காப்பியம் அமைத்துள்ளார் எனலாம். இதற்குமுன் தோன்றிய இலக்கியங் களெல்லாம் உதிரிப் பாடல்களின் தொகுப்பாய் விளங்க, சிலப்பதிகாரம் நீண்ட தொடர்நிலைச் செய்யுளாய் நெடுங்காப்பியமாய் விளங்குகிறது. சிலப்பதிகாரம் குடிமக்களைப் போற்றுவதோடு குடிமக்களுள் ஒரு

பெண்ணைத் தலைவியாகக் கொண்டு விளங்குவது தமிழ் மொழிக்கே உரிய தனிச்சிறப்பாகும். எனவேதான் இந்நூல் தமிழ் இலக்கிய வரலாற்றின் திருப்பு முனையாக அமைந்துள்ளது.

### சமுதாய சீர்திருத்தக் காப்பியம்

சிலப்பதிகாரமும் சமுதாயத்திற்கு தேவையான அனைத்து நன்னெறி களையும் வழங்கி நன்னெறிப் படுத்துகின்றது. “மனித வாழ்க்கையும் உணர்ச்சிகளும் காப்பியங்களில் சிறப்பிடம் பெறுதல் வேண்டும். காப்பியம் எழுந்த காலம் அல்லது அதற்குச் சற்று முன்னர் உள்ள காலக்கட்ட மக்கள் சமுதாயத்தின் உணர்ச்சிகளை வடித்துக் காட்டுதல் வேண்டும். இது ஒரு காலக்கட்டத்தின் அல்லது ஒரு நாட்டின் அல்லது ஒரு சமயத்தின் மெய்யுணர்வு வெளியீடாக அமைதல் வேண்டும். தவிர, தனியொரு மனிதனின் உணர்ச்சியாக குறிக் கோளாக அமைதல் கூடாது” என்னும் கூற்றுக்கு ஏற்ப சிலப்பதிகாரத்தில் சமுதாய மேம்பாட்டிற்கான குறிக்கோளைத் தெளிவுபடுத்துவது சிறப்பானதாகும்.

### சிலம்பின் சிறப்பியல்புகள்

இலக்கிய வானில் நிறைநிலவாக நின்று நாளும் மக்கள் தம் உள்ளத்தில் தணிணொளி வீசிவரும் தண்டமிழ்க் காப்பியத்திற்கு ஈடு இணையாக வேறு எக்காப்பியமும் எம்மொழியிலும் இல்லையென்று சொல்லுமளவிற்குச் சிலப்பதிகாரம் ஒப்புயர்வற்ற உயர்ந்த காப்பியமாக வாழ்ந்து வருகின்றது.

சீரோடும் சிறப்போடும் சீரிளமைத் திறத்தோடும் சிறந்திலங் கும் இக்காப்பியத்தின் சீர்மை உணர்ந்தே, **“நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்”** என்ற பாரதியாரும்

**“தேனிலே ஊறிய செந்தமிழின் -**
**சுவை தேரும்**
**சிலப்பதிகாரமதை ஊனிலே**
**எம்முயிர் உள்ளளவும் நிதம்**
**ஓதியுணர்ந்தின் புறுவோமே”**

என்று கவிமணியும் புகழ்ந்துள்ளனர். வியாசபாரதம், வால்மீகி இராமா யணம், ஹோமரின் இலியட், ஒடிசி முதலியனவும் பழம்பெரும் காப்பியங் களாகும். இவற்றோடு ஒப்பிட்டு நோக்கும் உயர்தகுதி சிலப்பதிகாரப் பெருங்காப்பியத்திற்கு உண்டு.

மூவரசுகள், மூவேந்தரின் ஒருங்கிணைப்பும் சிலப்பதிகாரத்தில் முன்வைக்கப்பெற்றன. நூற்றுக் கணக்கான குலங்களாகப் பிரிந்து கிடந்த பெருநிலப்பரப்பை ஒரே குடையின்கீழ்க் கொண்டு வரும் முயற்சியைச் சிலப்பதிகாரம்

மேற்கொண்டது. அரசியல், பண்பாடு, சமயம், மொழி, மரபு எனப் பல்நிலைகளில் ஒற்றைக்குவிமையத் தத்துவம் சிலப்பதிகாரத்தின் வழி வெளிப்பட்டுள்ளது. ஆதலால், இந்நூல் ஒப்பற்ற தனிச்சிறப்புடைய, காப்பியம் என்று அனைவராலும் மதிக்கப் படுகின்றது.

# என் தெருவோரம் நிற்கும் மரம்

*"என் பாதங்கள் வலிக்காமல் இருக்க*
*நான் நடந்து செல்லும் வழியில்*
*பூக்களைத் தூவுபவள்.*

*எனக்கு வேர்க்காமல் இருக்க*
*காற்றை வீசுபவள்.*

*நான் மழைக்காக ஒதுங்கினால் எனக்கு*
*இலைக் குடை தந்து காப்பவள்.*

*நான் ஊஞ்சல் கட்டி ஆட உதவுபவள்.*
*நான் கேட்காமல் என் பசியைத் தீர்க்க*
*பழங்கள் தருபவள்.*

*என் தாயைப் போல எதனையும்*
*எதிர்பாராமல் எனக்கு உதவுபவள்.*
*அவளுக்கு என்னைத் தெரியாது.*
*என்னை மட்டுமல்ல*
*நல்லவர் தீயவர் என்று*
*யாரையும் பிரித்தறியாது - இருந்தும்*
*பலனை எதிர்பார்க்காமல்*
*உதவுபவள் - அவளே*
*என் தெருவோரம் நிற்கும் மரம்!"*

*மு. கவிநிலவு*
*இளங்கலை ஆங்கிலம் முதலாண்டு*

# காற்று

*"என்னை ஆட்டி வைக்கும்*
*அழகு பதுமையே!*

*ஊர் ஊராய்ச் சுற்றி*
*உரிமையானவளே!*

*உன்னுடைய உருவம் தான்*
*என்னவோ?*

*மனிதனில் நுழைந்து உயிரானாய்.*
*மரத்துக்குள் புகுந்து இசையானாய்.*

*உன் மகத்துவம் புரிந்ததே*
*உன்னைக் காணத் துடிக்கும்*
*தேடலும் மிகுந்ததே"*

*செ. பிரியா*
*இளங்கலை கணிதம் முதலாண்டு ஆ பிரிவு*

## காமராசர்

“கல்விக் கண்ணை
திறந்துவைத்த கர்மவீரரு.
அந்தக் கண்ணியவான் பேரு.
பெருந்தலைவர் காமராஜரு.
தரணி ஆண்ட தலைவர்களில்
தலைசிறந்தவரு – நம்
தமிழகத்தைச் செழிக்க வைத்த
தங்க முதல்வரு.
பாமரனின் பிள்ளைகளைப்
பழக்கவைத்தவரு – மாணவர்
உவகையுடன் நாள்தோறும்
மதிய உணவும் தந்தவரு.
ஏழை எளிய மக்களையே
வாழ வைத்தவரு – அவர்
ஏற்றமுடன் வாழ்வதற்கு
வழி வகுத்தவரு.
உலகம் போற்றும் உத்தமராய்
உலவி வந்தவரு – நாட்டை
ஊழலற்ற ஆட்சியாலே
உயர வைத்தவரு.
வாழும் வரை எளிமையுடன்
வாழ்ந்து காட்டியவரு – என்றும்
வளர்பிறையாய் மக்கள் நெஞ்சில்
வாழும் தலைவரு.”

*எம். நாகலட்சுமி*
*இளங்கலை கணிதம் முதலாண்டு ஆ பிரிவு*

## கல்லூரிக்கனி

*“நண்பர்களே வாருங்கள்!*
*கல்லூரி என்னும் வயல்காட்டில்*
*அறிவு என்னும் வேர் ஊன்றி*
*குறிக்கோள் என்னும் நீர்ப் பாய்ச்சி*
*முயற்சி ஏரைக்கொண்டு உழுது*
*உழைப்பு என்னும்*
*விதையை விதைத்து*
*சோம்பல் என்னும் களை எடுத்து*
*கல்வி என்னும் உயர்ந்த*
*கனியைப் பெற நண்பர்களே*
*வாருங்கள்!”*

*வி. ரவீணா*
*இளங்கலை கணினிப் பயன்பாட்டியல்*
*முதலாண்டு இ பிரிவு*

## காடுகளைக் காப்போம்

*“காடுகளை அழித்து*
*வீடுகள் கட்டினோம்!*
*மழையையோ காணவில்லை.*
*மனிதனோ மடிகிறான்.*
*இறந்த மனிதனுக்குக்*
*கண்ணீர் வடிக்கத்*
*தண்ணீர் இல்லை.*
*வீட்டிலே பூந்தோட்டம்*
*காடோ வனவிலங்கு பாதுகாப்பு*
*மையம் ஆகட்டு ஆம்*
*வீட்டின் ஒவ்வொரு பூவும்*
*நம் குழந்தைகள்.*
*காட்டின் ஒவ்வொரு மரமும்*

*நம் முதியோர்கள்.*
*முடிக்கும் முன் ஒரு கேள்வி*
*கேட்கிறேன்.*
*காடுகளை அழிப்பதால்,*
*நாட்டுக்கும் கேடு!*
*மண்ணுக்கும் கேடு!*
*விண்ணுக்கும் கேடு!*
*இதனால் பயன் யாருக்கு?"*

*பி. ஹேமலதா*
*இளங்கலை கணிதம் முதலாண்டு ஆ பிரிவு*

## சுதந்திரச் சாபம்

*"சுதந்திரம் நமக்குக் கிடைத்திடவே*
*சுமைகள் பலவும் தாங்கினோமே!*
*சுதந்திரம் நமக்குக் கிடைத்த பின்னர்*
*சுயஅறிவை நாம் இழந்தோமே!*
*கல்வி அறிவைப் பெற்றிருந்தும்*
*கட்டுப்பாட்டை நாம் இழந்தோம்!*
*கணக்கற்ற கடமை நமக்கிருந்தும்*
*கவனம் இன்றி இருந்தோமே!*
*வாழ்க்கையை நமக்கென்று வாழாமல்*
*பிறர் சொல்லுக்காக வாழ்கின்றோமே"*

*அ. சார்புதீன்*
*இளங்கலை கணினி அறிவியல் முதலாண்டு ஈ பிரிவு*

## காந்தி

*"அடைபட்டோம் ஆங்கிலேயன்*
*என்னும் பூட்டில் - விடுபட்டோம்*
*காந்தி என்னும் சாவியில்.*
*ஆங்கிலேயன் அடித்தது*
*ஒரு கன்னம் - காந்தியடிகள்*
*காட்டினார் மறுகன்னம்.*
*நாட்டு மக்கள் சென்ற*
*அடிதடியில் பயனில்லை -*
*காந்தியடிகள் சென்ற*
*அகிம்சையில் ஆங்கிலேயன்*
*தாங்கவில்லை.*
*காந்தியடிகள் பிறந்ததும்*
*மறைந்ததும் மறந்தன, மறைந்தன.*
*ஆனால், அவர் வாழ்ந்ததும்*
*வாழ்வதும் மறக்காது, மறையாது.*
*அவர் நெஞ்சைத் துளைத்தது*
*ஆங்கிலேயர் குண்டு - இன்றும்*
*மக்கள் மனத்தில் மறையவில்லை*
*அவர் செய்த தொண்டு.*
*அன்று அவர் சென்றார் அகிம்சை*
*என்னும் தனிவழி.*
*நாம் இனிமேல் செல்வோம் காந்தி*
*என்னும் மகான் வழி."*

*கு. சத்திய மூர்த்தி*
*இளங்கலை கணினி அறிவியல்*
*முதலாண்டு அ பிரிவு*

## ஆசிரியர்கள்

*"எங்கள் வாழ்வு ஒளிபெற*
*தன் ஆயுள் இழந்து*
*ஒளிதரும் மெழுகுவர்த்திகள்.*
*சுண்ணக்கட்டியைத்*
*திருநீராய் எண்ணும்*
*தியாகச் செம்மல்கள்.*
*எங்களைத் தரம் வாய்ந்த*
*சிற்பமாக்கும் சிற்பிகள்.*
*எல்லா மாணவரையும் பேணும்*
*தாயுள்ளம் கொண்டவர்கள்.*
*வாழ்வில் தடம் மாறும்போது*
*வழிகாட்டும்*
*கலங்கரை விளக்குகள்.*
*அறிவுரை கூறும்போது*
*நீங்கள் என் நண்பர்.*
*கட்டளையிடும்போது நீங்கள்*
*என் தலைவன்.*
*என்றும் அடிபணிவேன்*
*உங்கள் அன்புக் கட்டளைக்கு.*
*வணங்குவேன் என்றும்*
*உங்களைக் கீழ்ப்படிந்த*
*மாணவியாகிய நான்."*

*பி. லலிதா*
*இளங்கலை கணினி அறிவியல் முதலாண்டு*
*அ பிரிவு*


## மாதங்களில் ஒரு கல்யாணம்

*"சித்திரைக்கும் வைகாசிக்கும்*
*நித்திரையில் கல்யாணம்.*
*சீர் எடுத்து ஆனியுடன்*
*ஆடி வந்தாளாம்.*
*ஆவணிக்கும் புரட்டாசிக்கும்*
*அழைப்பு இல்லையாம்.*
*ஐப்பசிபோய் கார்த்திகையை*
*அழைத்து வந்தாளாம்.*
*மார்கழியும் தைமகளும்*
*மலர் கொடுத்தனர்.*
*மாசிமகள் பங்குனிக்குச்*
*சூட்டி மகிழ்ந்தாள்.*

*கே.எம். நந்தினி,*
*இளங்கலை முதலாண்டு வேதியியல்துறை*

*தமிழ்த்துறையில் வாரம் இரண்டு நாட்கள் (செவ்வாய், வியாழன்) மாலை 4.00 மணிக்குப்* ***'பொன்மாலைப்பொழுது'*** *என்ற கதை, கவிதை அரங்கேற்ற நிகழ்ச்சி நடைபெறும்.*

*மாதந்தோறும் மூன்றாவது வாரம் மாலை 3.00 மணிமுதல்* ***'கவியரங்கம்'*** *நடைபெறும். படைப்புகளை அரங்கேற்ற விரும்புவோர் தங்களின் பெயர்களைத் தமிழ் விரிவுரையாளர்களிடம் முன்பதிவு செய்யவும்.*





# எம்.எஸ்.



எம். எஸ். சுப்புலட்சுமி என்று பரவலாக அறியப்படும் மதுரை சண்முகவடிவு சுப்புலட்சுமி புகழ்பெற்ற கர்நாடக இசைப் பாடகியாவார். 1998 ஆம் ஆண்டு இந்தியாவின் மிக உயர்ந்த விருதான பாரத ரத்னா விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். தமிழ், கன்னடம், மலையாளம், தெலுங்கு, வங்காள மொழி, இந்தி, சமஸ்கிருதம், குஜராத்தி ஆகிய பல மொழிகளில் இவர் பாடியுள்ளார். இவர் உலகின் பல நாடுகளுக்கும் பண்பாட்டுத் தூதுவராகச் சென்று பல நிகழ்ச்சிகள் நடத்தியுள்ளார். ஐக்கிய நாடுகள் சபையிலும் இவர் தன் அரங்கேற்றத்தை நிகழ்த்தியுள்ளார்.

## அறிமுகம்

எம். எஸ். சுப்புலட்சுமி அவர்கள் 1916 புரட்டாதி மாதம் 16 ஆம் நாள் இசைக்கலைஞர் மதுரை சண்முக வடிவு அம்மாளுக்குப் பிறந்தார். அவரது தந்தையார் சுப்பிரமணிய அய்யர் என்று பின்னாட்களில் பேட்டிகளில் சுப்புலட்சுமி தெரிவித்து இருக்கிறார். இவர் தம் சகோதரர் சக்திவேல், சகோதரி வடிவாம்பாள் ஆகியோருடன் இசை தொடர்பான சூழலில் வளர்ந்தார். இவரது தாயார் சண்முகவடிவு போன்றே வடிவாம்பாள் வீணை மீட்டுவதில் ஆர்வம் மிக்கவர். சக்திவேலுக்கு மிருதங்கத்தில் ஈடுபாடு அதிகம். ஆயினும் அவர்கள் இருவரும் இளவயதிலேயே காலமாகி விட்டனர். சுப்புலட்சுமியின் பாட்டியார் அக்கம்மாள் வயலின் கலைஞர்.

சுப்புலட்சுமிக்கு அவரது தாயாரே முதலில் குருவானார். இன்னிசை வீணையுடன் சேர்ந்து பாடி வந்த இவர் இசையில் வெகுவிரைவில் புகழ் பெற்றார். சுப்புலட்சுமிக்கு எட்டு வயதாக இருக்கும் போது சென்னை ஆளுநர், சண்முகவடிவின் வீணை இசையை ஒளிப்பதிவு செய்யச் சென்றார். அப்போது மகளையும் பாடச் சொன்னார். சிறுமி சிறிதும் தயங்காமல் 'மரகத வடிவம்' என்ற

செஞ்சுருட்டி இராகப் பாடலை உச்சஸ்தாயியில் பாடினார். இதைக் கேட்ட ஆளுநர் ஆச்சரியமடைந்து அப்பாடலையும் ஒளிப்பதிவு செய்து கொண்டார்.

**இசை ஆர்வம்**

இசைப்பின்னணியைக் கொண்ட குடும்பமாதலால் சிறுவயதிலிருந்தே சுப்புலட்சுமிக்கு இசையில் நாட்டம் இருந்ததில் ஆச்சரியம் இல்லை. தாயாருடன் பல கச்சேரிகளிலும் இவர் பங்கேற்றதுண்டு.

செம்மங்குடி சீனிவாச ஐயர், முசிறி சுப்பிரமணிய ஐயர், செம்பை வைத்தியநாத பாகவதர், ராஜ மாணிக்கம் பிள்ளை, ராஜரத்தினம் பிள்ளை, பாலக்காடு மணி ஐயர், ஜி. என். பாலசுப்பிரமணியம் போன்ற ஜாம்பவான்கள் இடம் பெறும் இசை நிகழ்ச்சிகளைச் சிறுவயதிலேயே நேரில் சென்று ரசித்துள்ளார். எம். எஸ். சுப்புலட்சுமி சிறு வயதில் தன் தாயாருடன் கச்சேரிகளுக்குச் சென்ற போது பெரிய கலைஞர்களே சுப்புலட்சுமியின் குரல் வளத்தை வாழ்த்தியதும் உண்டு. இவரது முறையான கல்வி ஐந்தாம் வகுப்பு வரையே அமைந்தது. இந்துஸ்தானி இசையை இவர் பண்டித நாராயணராவ் வியாசியிடமிருந்து கற்றார். அப்துல் கரீம்கான் மற்றும் பாதே குலாம்கானின் இசையையும் இவர் இரவு நேரங்களில் ரசிப்பதுண்டு.

1926ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட எல்.பி இசைத்தட்டில் 'மரகத வடிவும்செங்கதிர் வேலும்' எனும் பாடலைச் சண்முகவடிவின் வீணையும், எம். எஸ். சுப்புலட்சுமி பாடலும் இணைந்து வெளிவந்தது. இது எம். எஸ். சுப்புலட்சுமியின் முதலாவது இசைத்தட்டு ஆகும்.

மிருதங்க ஜாம்பவான் எனப் புகழபட்ட புதுக்கோட்டை தட்சிணா மூர்த்திப்பிள்ளை தொடக்க காலத் தில் எம். எஸ். சுப்பு லட்சுமியின் வளர்ச்சிக்கு மிக்க உதவியாக இருந்தார். அவரது மணிவிழாவில் எம். எஸ். சுப்பு லட்சுமியின் கச்சேரி நடைபெற்றது.

1935ஆம் ஆண்டில் நடைபெற்ற இந்தக் கச்சேரிதான் எம். எஸ். சுப்புலட்சுமியின் சங்கீதத் திறனை வெளியுலகம் அறியச் செய்தது. அதே ஆண்டு மைசூர் சமஸ் தானத்தில் அப்போதைய மைசூர் மகாராஜாவின் அரசவையில் திருக் கோகர்ணம் ரங்கநாயகி அம்மாள் மிருதங்கத்துடன் எம். எஸ். சுப்புலட்சுமி கச்சேரி செய்தார். அது

முதற்கொண்டு தென்னிந்தியாவின் எல்லா ஊர்களிலும் எம். எஸ். சுப்புலட்சுமியின் கச்சேரிகள் நடை பெற்றன.

**திரைத்துறை**

அந்தக் காலத்தில் பாடகிகள் தான் நடிகை ஆகமுடியும். எம். எஸ். சுப்புலட்சுமியின் இனிமையான குரலைக் கேட்ட தயாரிப்பாளர் கே. சுப்பிரமணியம், அவரைத் தனது ‘சேவாசதனம்’ படத்தின் கதா நாயகியாக நடிக்க வைத்தார். இந்தப் படத்தின் படப்பிடிப்பு கிண்டியில் உள்ள ஒரு படப்பிடிப்புத் தளத்தில் நடைபெற்றது. அப்போது சுப்பு லட்சுமிக்குத் துணையாக வந்தவர் சதாசிவம்.

அதனைத் தொடர்ந்து காளிதாசனாரின் சகுந்தலை படத்தில் சுப்புலட்சுமி கதாநாயகியாக நடித்துப் புகழ் பெற்றார். ‘மிகக் குதூகலிப்பதும் ஏனோ’, ‘எங்கும் நிறை நாதப்பிரம்மம்’, ‘பிரேமையில் யாவும் மறந்தேனே’ ஆகிய பாடல்கள் மிகவும் புகழ் பெற்றவை. இப்படத்தில் துஷ்யந்தனாக நடித்தவர் சங்கீத வித்துவான் ஜி. என். பாலசுப்பிரமணியம் ஆவார். எம். எஸ். சுப்புலட்சுமி இப்படத்தில், ‘கோகிலகான இசைவாணி’ என்ற அடைமொழியுடன் விளம்பரம் செய்யப்பட்டார்.

**திருமணம்**

சகுந்தலை படத்தைத் தயாரித்தவர் சதாசிவம் ஆவார். இவர் எம். எஸ். சுப்புலட்சுமியின் இசையில் ஈடுபாடு கொண்டதனால் 1940ஆம் ஆண்டு இருவரும் திருமணம் செய்து கொண்டனர்.

1941ஆம் ஆண்டு சாவித்திரி என்ற படத்தில் எம். எஸ். சுப்புலட்சுமியை நாரதர் வேடத்தில் நடிக்க வேண்டினார்கள். ஆனால், ஆண்வேடத்தில் நடிக்க சுப்புலட்சுமி மறுத்து விட்டார். அப்போது எழுத்தாளர் கல்கியும் ஆனந்த விகடன் பத்திரிகையிலிருந்து வெளியேறி இருந்தார். கல்கியும் சதாசிவமும் சேர்ந்து சொந்தப் பத்திரிகை ஆரம்பிக்க விருப்பம் கொண்டனர். ஆனால், கைவசம் பணம் இருக்கவில்லை. ஆதலால், சுப்புலட்சுமி நாரதர் வேடத்தில் நடிக்க ஒப்புக் கொண்டு அதற்கான சம்பளத்தை வாங்கிக் கொடுத்தால் அந்தப் பணத்தைக் கொண்டு புதுப்பத்திரிகை ஆரம்பிக்கலாம் எனச் சதாசிவம் எம். எஸ். சுப்பு லட்சுமியிடம் சொன்னார். அதற்கா கவே சுப்புலட்சுமி சாவித்திரி

படத்தில் நாரதர் வேடத்தில் நடித்தார். அதில் கொடுக்கப்பட்ட ஊதியத் தொகையில் 'கல்கி' வாரஇதழ் தொடங்கப்பட்டது.

சதாசிவம் மனைவியின் இசையைப் பக்தி மார்க்கத்துக்குத் திருப்ப முயன்றார். பக்த மீரா எனும் திரைப்படம் 1945 இல் வெளியிடப்பட்டது. இப்படம் அற்புதமான பாடல்கள் நிறைந்தது. 'காற்றினிலே வரும் கீதம்', (இது கல்கி எழுதிய பாடல்) 'பிருந்தாவனத்தில் கண்ணன் வளர்ந்த', 'கிரிதர கோபாலா', 'எனது உள்ளமே' போன்ற பாடல்கள் இன்னமும் அனைவரது செவிகளிலும் ஒலிக்கின்றன. பக்த மீரா இந்தி மொழியில் தயாரிக்கப்பட்டு, வட நாட்டவருக்கு அறிமுகம் செய்யப் பட்டது. அப்போது அரசியல் பிரமுகர்கள் இந்தியாவின் ஆளுநர் மவுண்ட்பேட்டன் பிரபு தம்பதியினர், பிரதமர் ஜவஹர்லால் நேரு, கவியரசு சரோஜினி நாயுடு ஆகியோரின் நட்பும் அறிமுகமும் சதாசிவம் தம்பதி யினருக்கு ஏற்பட்டது. இந்தி மீராவைப் பார்த்த பிரதமர் நேரு 'இசையின் இராணிக்கு முன்னால் நான் சாதாரண பிரதமர் தானே' எனப் பாராட்டினார்.

இந்தியில் வெளியான மீரா பஜன்கள் இந்தி ரசிகர்களிடையே சுப்புலட்சுமிக்கு அங்கீகாரத்தை ஏற்படுத்தித் தந்தது. அதே போல கேதாரி நாத்திலிருந்து கன்னியா குமரி வரையான பக்தர்களையும் இவரது ஆன்மீகக் குரல் பரவசப்படுத்தியது.

இவர் கணவர் இவரைக் கொண்டு 1944 இல் நான்கு இசை நிகழ்ச்சிகள் நடத்தி இரண்டு கோடி ரூபா வரை நிதி திரட்டினார். மனைவியின் குரலை பொது நலத்திற்குப் பயன்படுத்த வேண்டும் என்ற சதாசிவத்தின் எண்ணமே இதற்குப் பின்புலமாக அமைந்தது. இந்நிதி மருத்துவம், அறிவியல், ஆராய்ச்சி, கல்வி மற்றும் சமயத்தொண்டு ஆகியவற்றுக்காகச் செலவிடப்பட்டது.

**விருதுகள்**

- *பத்ம பூஷண் - 1954*
- *சங்கீத கலாநிதி - 1968*
- *மக்சேசே பரிசு - 1974*
- *பத்ம விபூஷண் - 1975*
- *காளிதாச சன்மான் - 1988*
- *நாட்டு ஒருமைப்பாட்டிற்கான இந்திரா காந்தி விருது - 1990*
- *பாரத ரத்னா – 1998*

கருத்துத் தொகுப்பு:
**முனைவர் ப. சரவணன்**
**தமிழ்விரிவுரையாளர்**

# எய்ட்ஸ்

எச்.ஐ.வி எனும் வைரஸினால்தான் எய்ட்ஸ் ஏற்படுகிறது. வைரஸ் என்பதை நோயை உண்டாக்கக்கூடிய மிக சிறிய நுண்ணுயிர் என்று சொல்லலாம். பக்டீரியா (Bacteria), பங்கஸ் (Fungus) போன்ற நுண்ணுயிர்களைச் சாதாரண நுணுக்குக்காட்டி (Microscope) மூலம் பார்க்கலாம். சாதாரண நுணுக்குக்காட்டி மூலம் காணமுடியாத அளவிற்கு வைரஸ் மிகச்சிறியது. இதனை மிகவும் சக்தி வாய்ந்த இலத்திரன் நுணுக்குக்காட்டி (Electron Microscope) மூலமே பார்க்கமுடியும். வைரஸ் கிருமிகள் விருத்தியடைந்து, பெருகுவதற்கு உயிருள்ள கலம் (Cell) தேவை. அது பெருகும் போது, தான் தங்கியிருக்கும் கலத்தை அழிக்கக் கூடும். அல்லது செயற்திறனைப் பாதிக்கக்கூடும். எயிட்சை உண்டாக்கும் எச்.ஐ.வி வைரஸ் மனித உடலின் நிர்ப்பீடனத் தொகுதியைத் தாக்குகின்றது. நிர்ப்பீடனத் தொகுதியில் உள்ள ரீ-ஹெல்பர் கலங்களையே (T-helper Cell) இது முக்கியமாகத் தாக்குவதை விஞ்ஞானி கள் கண்டறிந்துள்ளனர். HIV வைரஸ் தொற்றியிருக்கும் கலத்தில் பெருகிப் பின் அக்கலத்தை அழித்து வெளியேறுகிறது. வெளியேறிய வைரசுகள் மேலும் பல கலங்களைத் தாக்கி அழித்துப் பெருகுகின்றன. இவ்வாறு நோயாளியின் நிர்ப்பீடனத் தொகுதி பெரிதும் பாதிக்கப்படும். இந்நிலையிலேயே நோய்க்கான அறிகுறிகள் தோன்ற ஆரம்பிக்கிறது.

ஒருவர் எச்.ஐ.வியுடன் பல ஆண்டுகாலம் வாழமுடியும். ஆனால், அவர் உடல் நோய் எதிர்ப்புச் சக்தியை இழக்கும் போதுதான் எய்ட்ஸ் நோயாளி யாகிறார். ஓர் ஆண்டுக்குள் அவருக்கு ஏராளமான நோய்கள் ஒன்றன் பின் ஒன்றாகத் தொற்றிக் கொள்ளும் நிலை அவருக்கு ஏற்படுகிறது.

எய்ட்ஸ் நோய் 1981ஆம் ஆண்டிலேயே அறியப்பட்ட போதிலும், அதை உண்டாக்கும் வைரஸ் கிருமி 1983ம் ஆண்டிலேயே இனங்காணப்பட்டது. பிரான்ஸ் நாட்டில் உள்ள பாஸ்டர் விஞ்ஞானக் கூடத்தில் (Institute Pasteur) பிரான்சு நாட்டு விஞ்ஞானி லூக் மொண்டிக்கயர் எனும் விஞ்ஞானியால் முதலில் கண்டுபிடிக்கப் பட்டது. அப்பொழுது இது L.A.V வைரஸ்

(Lymphadenopathy associated Virus) என்று பெயரிடப்பட்டது. 1984ஆம் ஆண்டு அமெரிக்காவில் உள்ள 'தேசிய புற்று நோய் நிறுவனம்' இக்கிருமிதான் எய்ட்ஸ் நோயை உண்டாக்குகிறது என்பதை உறுதிப்படுத்தியது. அப்பொழுது இதற்கு H.I.V – type III வைரஸ் (Human T-lymphotrophic Virus type III) என்று பெயரிடப்பட்டது. 1986ஆம் ஆண்டில் தான் தற்போது பயன்படுத்தப் படும் HIV வைரஸ் (Human (khDl) I mmuno deficiency (நீர்ப்பீடனக் குறைபாடு.) Virus (வைரசு) என்ற பெயர் உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

HIV வைரஸின் இரண்டு உப பிரிவுகள் இருப்பதாக இப்பொழுது நம்பப்படுகிறது.ஆரம்பத்தில் அமெரிக்கா உட்பட மேற்கத்தைய நாடுகளில் கண்டுபிடிக்கப்பட்டதை HIV-I என்றும், பின்பு மேற்கு ஆபிரிக்க நாடுகளில் கண்டுப் பிடிக்கப்பட்ட புதிய உபபிரிவை HIV – II என அழைக்கிறார்கள்.

**எய்ட்ஸ் பரவுதல் தன்மை**

பொதுவாக HIV மனித உடலில் உள்ள எல்லா திரவங்களிலும் படிந்திருக்கிறது என்றாலும் கூட, இரத்தம், விந்து, பெண்ணுறுப்பு களில் உருவாகும் திரவம், தாய்ப்பால் ஆகியவற்றின் வாயி லாகத்தான் பரவுகின்றது. எனவே, ஆண் - பெண் உடலுறவின் போது பாதுகாப்பு முறைகளைக் கையாள் வது அவசியமாகின்றது. 80 சதவீத எய்ட்ஸுக்கு காரணம் பாதுகாப்பற்ற உடல் உறவுதான் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 25 வயதுக்குட் பட்ட இளைஞர்களுக்கு எய்ட்ஸ் அதிகமாகப் பரவுகிறது. அதற்கு காரணம் அந்த வயதில் அவர்கள் பாலுறவில் அதிக நாட்டமிக்கவர் களாக இருப்பதால் பாதுகாப்பான உடல் உறவை மறந்து விடுகிறார்கள். 'நீங்கள் எப்படிபட்ட வராக இருந்தாலும், எங்கு வாழ்கிறவராக இருந்தாலும் எச்.ஐ.வி தொற்று பற்றிய விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும்' என்று தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு நிறுவனம் மற்றும் யுனிசெப் கூட்டாக வெளியிட்டுள்ள கையேட்டில் தெரிவித்துள்ளது. போதைப் பொருட் களைப் பயன்படுத்துகையில் சுத்தம் செய்யாப்படாத ஊசியை ஒருவருக் கொருவர் செலுத்திக் கொள்வதன் மூலமாகவும் HIV பரவுகிறது. இதே போல் அறுவை சிகிச்சையின் போது

சுத்திகரிக்கப்படாத ஆயுதங்களைப் பயன்படுத்துவதனாலும், HIV பரவக் கூடிய வாய்ப்புகள் உள்ளன. அதே நேரம் HIV உள்ள இரத்தம் மூலமாகவும் எளிதாக பரவுகிறது. பாதிக்கப்பட்ட தாயிடமிருந்து குழந் தைக்குப் பரவுதல் எனும்போது கர்ப்பகாலம், பேறு காலம், தாய்ப்பால் புகட்டும் காலம் ஆகிய காலங்களில் குழந்தைக்கு HIV பரவுகிறது. எய்ட்ஸ் நோயுற்றவரின் உடற்திரவங்களுடன் தொடர்பு ஏற்பட்ட எவரையுமே இந்நோய் தாக்கக்கூடும். அதேநேரம் கொனரியா (Gonorrohoea), சிபிலிஸ் (Syphilis), ஹெர்பீஸ் (Herpes) போன்ற ஏனைய பாலியல் நோய் உள்ளவர்களுக்கும், பாலியல் உறுப்புகளில் சிறுகாயங்கள், உரசல்கள் உள்ளவர்களுக்கும். பலரோடு உடலுறவு வைப்பவர் களுக்கும் இந்நோய் ஏற்படக்கூடிய நிகழ்தகவு அதிகம். HIV தொற்றி யோருடன் சாதாரணமாகச் சமூக பழக்க, வழக்கங்களில் ஈடுபடுவத னூடாகவோ, கை குலுக்குதல், தொடுதல், கட்டிய ணைத்தல், விளையாடுதல், வண்டிகளில் பயணம் செய்தல், வியர்வை, கண்ணீர், சிறுநீர் மற்றும் முத்தமிடல் மூலமாகவோ, பொதுக் கழிப்பறைகள் மற்றும் படுக்கை, அவர்கள் பயன்படுத்திய உணவுப் பாத்திரங்கள் மூலமாகவோ, நீச்சல் குளம் மற்றும் இருமல், தும்மல், கொசுக்கடி மூலமாகவோ பரவாது. இருப்பினும் பொது இடங்களில் சவரம் செய்து கொள்ளும் ஆண்கள் பொதுக் கத்திகளைப் பயன் படுத்தாமல் புதிய சவர அலகு களைப் பயன்படுத்துவதை உறுதி செய்து கொள்ளல் வேண்டும்.

**எய்ட்ஸ் அறிகுறிகள்**

அறிகுறிகள் HIV பாதிப்புக் குள்ளான பலரிடம் ஆரம்பநிலையில் அதற்கான அறிகுறிகள் தெரிவ தில்லை. இருந்தபோதிலும் சிலரிடம் இது ‘ஃப்ளு சுரமாக’ (காய்ச்சல்) வெளிப்படுகிறது. அதுவும் இந்த வைரஸ் மூன்று முதல் ஆறு வாரங்களுக்குப் பிறகே தெரிகிறது. இந்தத் தீவிர HIV பாதிப்பினால் ஏற்படும் உடல் நலக்குறைவு, காய்ச்சல், தலைவலி, உடல்சோர்வு, குமட்டல், வியர்வை (குறிப்பாக இரவு நேரங்களில்) நடுக்கம், வயிற்றுப்போக்கு, நெறிகட்டுதல் (அக்குள், கழுத்து) போன்றவற் றினைத் தோற்றுவிக்கின்றது. இந்த அறிகுறிகள் கூட HIV தொற்றிய சில நாட்களில் தெரிவதில்லை. மேலும் இது, ஆரம்பநிலையில் வேறு ஏதோ ஒரு வைரஸ் என்று

தவறாகவே இனங் காணப்படுகிறது. எனவே, ஆரம்ப நிலையில் HIV தொற்றைக் கண்டுபிடிப்பது கடினமாகும். தொற்று ஏற்பட்ட முதல் மூன்று மாதங்களில் வைரசின் எண்ணிக்கை கணக்கற்றுப் பெருகி, உடலின் பல பாகங்களிலும் பரவுகின்றன. குறிப்பாக மூட்டுக்களில் உள்ள இழையங்கள் இதனால் பாதிக்கப்படுகின்றன. இந்நிலையில் அத்தொற்று, பாதிக்கப் பட்டவர்களிட மிருந்து மற்றவர்களுக்கு எளிதாகப் பரவிவிடுகின்றது.

உடலில் உள்ள நோய் எதிர்ப்பு கலங்களான இரத்த வெள்ளை அணுக்கள் அனைத்தும் ஒன்று திரண்டு போராடத் தொடங்கும் போதுதான் HIV யின் வேகம் சற்று குறைகிறது. HIV தொற்றின் தீவிரமான அறிகுறிகள் தெரிய பல வருடங்கள் ஆகின்றன. பெரியவர்களுக்கு HIV தொற்றிய பின் அது வெளித்தெரிவதற்கு 10 ஆண்டுகளுக்கும் மேல் ஆகிறது. HIV தொற்றோடு பிறக்கும் குழந்தைகளுக்கு அது தெரிய இரண்டு வருடங்கள் ஆகின்றன. இவ்வாறு அறிகுறிகள் தெரியாத நிலை மனிதருக்கு மனிதர் மாறுபடும். ‘எய்ட்ஸ்’ வெளியில் தெரிய ஆரம்பித்த உடன் பாதிக்கப்பட்டவர் அடிக்கடி நோய் வாய்ப்படுவர். உடல் எடை குறைவு, தொடர் காய்ச்சல், வயிற்றுப்போக்கு ஆகியன எய்ட்ஸின் முக்கியமான அறிகுறிகளாகும். எய்ட்ஸ் நோயாளிகள், காசநோய், பூஞ்சான் நோய் தொற்று, சில வகைப் புற்றுநோய்கள், நிமோனியா போன்ற பல்வேறு நோய்களால் பாதிக்கப் படுகின்றனர்.

**எய்ட்ஸ் தெரிந்து கொள்ள வழி**

இரண்டு வகை இரத்தச் சோதனைகள் நடத்தப்படுகின்றன. முதலாவதாக நடத்தப்படும் இரத்தச் சோதனை, எலைசா சோதனை யாகும். இது இனம்காணல் பரி சோதனை எனப்படுகிறது. எலைசா சோதனையானது எச்.ஐ.வி தொற்று அல்லாத பிற காரணங்கள் தொடர்பாகவும் நேர் வகை பெறுபேற்றைத் தர இடமுண்டு. ‘வெஸ்டர்ன் புலொட் சோதனை’ உறுதிப்படுத்தும் சோதனையாகும். எலைசா சோதனையில் நேர் வகையை காட்டும் ஒவ்வொரு இரத்த மாதிரியும் வெஸ்டர்ன் புலொட் சோதனைக்கு உட்படுத் தப்படும். இது ஒரு சிறப்பான சோதனையாகும். இரத்த வகையில் எச்.ஐ.வி பிறபொருளெதிரி காணப் பட்டால் மாத்திரமே இச் சோதனையின் போது பெறுபேறு காட்டப்படும். எலைசா சோதனை,

வெஸ்டர்ன் புலொட் சோதனை ஆகிய இரண்டு சோதனையிலும் நேர் (+) வகை காணப்பட்டால் எச்.ஐ.வி பிறபொருளெதிரி உண்டு என்பது அல்லது எச்.ஐ.வி தொற்று ஏற்பட்டுள்ளது என்பது உறுதியாகும்.

**புள்ளிவிபரம்**

உலகில் ஒரு மணி நேரத்தில் 600 நபர்கள் எச்.ஐ.வியால் பதிக்கப் படுகிறார்கள். உலகில் ஒரு நிமிடத்தில் ஒரு குழந்தை எய்ட்ஸ் மூலம் இறக்கிறது. உலக சுகாதார அமைப்பின் 2006 கணக்கெடுப்பின்படி உலக அளவில் எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டு மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை 330,000 குழந்தைகள் உட்பட 2.1 மில்லியனாக அதிகரித்திருந்தது. 39.5 மில்லியன் மக்கள் எச்.ஐ.வி.யால் பாதிக்கப் பட்டிருந்தனர். தென்னாப்பிரிக்காவே உலகிலேயே அதிக அளவில் எச். ஐ. வி. நோயாளிகளைக் கொண்டிருக்கிறது. இதைத் தொடர்ந்து நைஜீரியாவும் இந்தியாவும் உள்ளன.

**எயிட்ஸ் மருந்துகள்**

HIV தொற்று ஏற்பட்ட பின்பு அதனை முற்றாக அழிக்க இதுவரை மருந்துகள் கண்டுபிடிக்கப்பட வில்லை. இதன் காரணமாகவே எய்ட்ஸைக் குணப்படுத்த முடியாத நோயாக கூறப்படுகின்றது. இருப்பினும் HIV கிருமிகள் உடலினுள் பரவும் வேகத்தை குறைக்கக் கூடிய மருந்துகள் இப்போது நம்மிடம் உள்ளன. நோய்த் தொற்றுக் களுக்கான சிகிச்சையுடன் இந்த மருந்துகளையும் முறையாகப் பயன்படுத்தினால் HIV பாதிப்பு உள்ளவர்கள் பல ஆண்டுகள் ஆரோக்கியத்துடன் உயிர் வாழ வாய்ப்புண்டு.

**சமுதாய நலன் கருதி இக்கட்டுரையினைத் தமிழ்த்துறை வெளியிடுகின்றது.**
**நன்றி – தமிழ் விக்கிபீடியா**

# ரோஜா மலரே

***“அழகின் அழகே!***
***இயற்கை பெற்ற முத்தே!***
***உன் நிறமோ எத்தனை!***
***நிறத்தால் பல***
***இதயங்களைக் கவர்கிறாய்***
***உன் அழகிற்கோ எல்லை***
***உண்டா?***
***எங்கள் மனத்தைப் பறித்த***
***கள்ளியே!***
***உன் அழகால் நேருவின்***
***இதயத்தில் குடிகொண்டாய்!***
***உன் பெருமைக்கோ அளவில்லை***
***மங்கை கூந்தலில் இடம்பெற்ற***
***உன்னை நேசிக்காமல் இருப்பவர்***
***இவ்வுலகில் உண்டோ?***

***இதயங்களை இணைக்கும் நண்பனே!***
***நீ ஒரு முறை பூத்து***
***வாடுவதைக் கண்டு கலங்காதே!***
***நீ ஒரு முறை பூப்பதால்***
***பல இதயங்களில் மலர்கிறாய்!***
***வாழ்வின் மணமேடையிலும்***
***கல்லறையிலும் துணைநிற்கின்றாய்***
***உன்னை மறக்குமா இவ்வுலகம்?***
***உனக்கோ என்றும் மரணமில்லை.***
***என்றும் அழகின் சின்னமாய்***
***எங்கள் இதயங்களில் வாழ்வாய்"***

***எஸ். மஞ்சுபார்கவி***
*இளங்கலை கணினி அறிவியல் முதலாண்டு*
*அ பிரிவு*

<u>சங்கச் சாரல் - 10</u>

## கொங்குதேர் வாழ்க்கை

வாழ்க்கையில் நமக்கென விதிக்கப் பட்டவையும் உண்டு. அவற்றை நாம் மாற்றமுடியாது. குறிப்பாக பிறப்பு, இறப்பு, தாய், தந்தை முதலியன. இதே வாழ்க்கையில் நாமாய் அமைத்துக் கொள்வதும் சில உண்டு. குறிப்பாக அறிவு, ஆற்றல், குணம் முதலியன.

நாமாகத் தேர்ந்தெடுக்கும் பகுதிகளில் நாம் அதிகக் கவனம் செலுத்தவேண்டும். ஏனென்றால், நம் வாழ்க்கைக்குரிய ஒன்றை நாமாய் அமைக்கும்போது அதில் நாமே எல்லாமாக இருக்கின்றோம். அதனால் வரும் நன்மைகளுக்கும் தீமைகளுக்கும் நாமே காரணம் ஆகிறோம். இதில் பிறரைக் குறைகூறுதல் கூடாது. அப்படிக் கூறுவதால் நமக்கு ஏதும் கிடைப்பதில்லை. நம் வாழ்க்கையில் நாம் தான் கவனமாய் இருக்க வேண்டும்.

தேர்ந்தெடுக்கும் நிலையில் பல செய்திகளைக் கவனிக்க வேண்டும். இதில் கவனமுடன் இருந்துவிட்டால் வாழ்க்கையில் மகிழ்ச்சிக்கு அளவில்லாது போய் விடும்.

குறுந்தொகையின் இரண்டாவது பாடல் இறையனார் எனும் புலவர் பாடியது. அகப்பாடல். தலைவன் கூற்று. "இயற்கைப் புணர்ச்சிக்கண் இடையீடு பட்டு நின்ற தலைமகன், தலைமகளை நாணின் நீக்குதற்பொருட்டு மெய்தொட்டுப் பயிறல் முதலாயின அவண்மாட்டு நிகழ்த்திக் கூடத் தனது அன்பு தோற்ற நலம்பாராட்டியது" எனும் துறையில் அமைந்தது.

களவுக்காலத்தில் தலைவியைக் கூடிய தலைவன், அவளின் நாணத்தை நீக்கும் பொருட்டு

வண்டை நோக்கிப் பேசுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

***"கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோநீ யறியும் பூவே"***

*(குறுந்தொகை - 02)*

"பூந்தாதை ஆராய்ந்து உண்ணுகின்ற வாழ்க்கையினையும் உன்னிடத்தே சிறையையும் உடைய வண்டே! என் நிலத்து வண்டாதலின் யான் விரும்பியதையே கூறாமல், நீ கண்கூடாக அறிந்ததையே சொல் வாயாக. நீ அறியும் மலர்களுள் எழுமையும் என்னோடு பயிலுதல் பொருந்திய நட்பையும் மயில் போன்ற மென்மையையும் நெருங்கிய பற்களை யும் உடைய இவ்வரிவையின் கூந்தலைப் போல நறுமணமுடைய பூக்களும் உள்ளனவோ" என்று கேட்கின்றான்.

இதனுள் நம் ஐயம் தீர்க்கும் ஒரு நபரை எப்படித் தேர்ந்தெடுப்பது என்பதையும் தலைவன், தலைவி எனும் இருவருக்கிடையில் மூன்றாவதாய் ஒருவர் வரலாமா? அப்படிவரின் அந்த மூன்றாம் நபரை எப்படித் தேர்ந்தெடுப்பது? என்பதையும் இப்பாடல் வழிப் பெறமுடிகிறது.

**வாழ்க்கைப் பின்புலம்**

ஐயம் தீர்க்கும் நபரைத் தேர்வதற்கு முதலில் அவர் வாழ்க்கையின் பின்புலம் என்ன? அவர் எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்கிறார்? என்பதை நோக்க வேண்டும்.

இதனை இப்பாடல், "கொங்கு தேர் வாழ்க்கை" எனச் சுட்டுகிறது. வண்டினங்கள் பல உண்டு. அவற்றுள் சிறப்பான வாழ்க்கையை உடையது இவ்வண்டு. எவ்வாறு எனில், தன் உணவாகிய தேன் எங்குக் கிடைத்தாலும் எப்படிக் கிடைத்தாலும் உண்ணும் இயல் பற்றது. உணவைத் தேர்ந்து உண்பது. வகையறிந்து உண்பது. காலமறிந்து உண்பது.

'கொங்கு' எனும் தேர் வேனிற்காலத்துக் கிடைக்கும் தேன். அத்தேனை உரிய பருவத்தில் தேர்ந்தெடுத்தும் உண்ணும் இயல்பை உடையது இவ்வண்டு. இதனையே 'கொங்குதேர் வாழ்க்கை' எனச்சுட்டுகிறது.

**அம்சிறைத் தும்பி**

நம் ஐயம் தீர்க்கவரும் நபரிடம் நாம் நம்முடைய சுயதகவல்களைக் கூற வேண்டிய நிலை ஏற்படும். அவ்வாறான

தகவல்களை அந்நபர் பிறருக்குக் கொடுத்துவிடாது, காப்பாற்றும் இயல்புள்ளவராய் இருத்தல் வேண்டும்.

இந்த வண்டிடம் அக்குணம் உள்ளது. இதனை, 'அம்சிறைத் தும்பி' என்று சுட்டுகிறது. பறவைகளின் தனித்தன்மை பறப்பது. அதற்கான இறகுகள் வெளியே தெரிவது இயற்கை. ஆனால், இந்த வண்டின் சிறகுகளே ஒரு மறைவிற்குள் இருக்கும் தன்மையது. இதனால் இவ்வண்டு தகவல்களைக் கட்டிக்காக்கும் இயல்புள்ளதை அறிய முடிகிறது.

**காமம் செப்பாது**

ஐயம் தீர்க்கும் நபர் விருப்பு, வெறுப்பின்றி இருக்க வேண்டும். தமது விருப்பத்தின் காரணமாகவே அல்லது வெறுப்பின் காரணமாகவோ கூறப்படும் செய்தியில் உண்மையின் அளவு சரியாக இருக்காது. எனவே, உண்மை செப்பும் நபராகவும் விருப்பும் வெறுப்பும் இல்லாத நபராகவும் இருக்கவேண்டும்.

**கண்டது மொழிதல்**

நாம் காணும் காட்சிகளைச் சேர்த்தல், தவிர்த்தல் இன்றி அவ்வாறே கூற வேண்டும். இவ்வியல்பு எளிதில் அமைவது இல்லை. காணும் காட்சியில் நம் மனம் எண்ணிய கருத்தையும் இணைத்தே வெளியிடுகின்றார். இது நடுவுநிலைப் பண்பாகாது. கண்ட காட்சிக்கும், அக்காட்சி குறித்து மனத்தில் தோன்றும் எண்ணத் திற்கும் உள்ள வேறுபாடுகளைப் பிரித்து அறியும் ஆற்றல் வேண்டும். அந்த ஆற்றலின்படி கண்டதைக் கண்டவாறே கூறும் இயல்புடைய நபரே ஐயம் தீர்ப்பதற்கு எற்புடையவர். இவ்வியல்பையே வண்டிடம் வேண்டுகின்றான் தலை வன்.

கண்டது என்பது அறிவு எனும் நிலையில் விளக்கம் பெறுகிறது. அறிந்தவை எல்லாம் கண்டவை ஆகின்றன. இங்குத் தேர்ந்தெடுக்கும் நபரின் அறிவு சுட்டப்படுகிறது. எது தொடர்பான வினாவிற்கு யாரிடம் விடைகேட்க வேண்டும் என்ற வரையறை இங்குச் சுட்டப்படுகிறது.

தலைவனுக்கு ஏற்பட்ட ஐயம் தலைவியின் கூந்தல் மணம் போல் வேறு ஏதேனும் மணம் உண்டா? இவ்வினாவிற்கு யாரிடம் பதில் கேட்டால் சிறப்பான விடை கிடைக்கும்? மணங்களை எல்லாம் அறிந்தவரிடம் கேட்பதே சிறப்பு. அப்படி ஆயின் அது யார்? அதுதான் வண்டு. அது ஒவ்வொரு நாளும் பூக்களின் மீதே அமர்ந்து எல்லாப் பூக்களின் நறுமணங்களை

அறிந்துள்ளது. அதன் பொருட்டே கூறுகின்றான்.

'கண்டது மொழியுமோ' என்ற நிலையில், வண்டு நறுமணங்களை எல்லாம் மிகுதியும் கண்டது என்னும் கருத்து தலைவன் உள்ளத்தில் இருப்பதை உணரமுடிகிறது.

**பயிலியது கெழீஇய நட்பு**

இருவர்க்கிடையிலான கருத்திற்குத் தீர்வைச் சொல்வதற்காக மற்றொரு வரை அழைக்கும்போது, அந்த மூன்றாம் நபர் அந்த இருவருக்கும் இடையிலான உறவை நன்கு அறிந்தவராக இருக்கவேண்டும்.

இங்குத் தலைவன், தலைவி யருக்கு இடையிலான உறவை வண்டு அறிந்திருக்க முடியாது. இந்நிலையில் அந்த வண்டிற்குத் தங்களுக்கு இடையிலான உறவைப் பற்றிக் கூறுகிறான் தலைவன்.

அதன்படி, தலைவியானவள் என்னோடு ஏழு பிறப்புகளிலும் பொருந்தி வாழக்கூடிய உறவுடைய வள் என்பதையே 'பயிலியது கெழீஇய நட்பு' என்கின்றான்.

**மயிலியல், செறியெயிற், அரிவை**

எழு பிறப்பும் பொருந்திய நட்பை உடைய தலைவியின் தனித்தன்மை அல்லது வண்டு அறிய வேண்டிய செய்திகளுள் முதன்மையானது, மயிலியலாகும். அதாவது இத்தலைவி மிகவும் மென்மையானவள். எனவே, அவளின் இயல்பிற்கு ஏற்ற முறையில் விடைதருக என்பது குறிப்பு.

செறியெயிற் என்பது தலை வியின் அழகிய எயிற்றை அவள் சிரித்த போதும் அவளை நுகர்ந்த போதும் கணவன் இதனைக் கூறுவதன்வழித் தலைவி யின் புன்னகை பாதிக்காத வகையில் பதில் தருக என்பது குறிப்பு. அரிவை என்பது தலைவியின் பண்பைக் குறித்தது. தலைவியின் பண்புகளைக் கருத்தில் கொண்டு பதில் தருக என்பது குறிப்பு.

**நறியவும் உளவோ? நீ யறியும் பூவே**

ஐயம் தோன்றிய நிலையில் தன் கருத்து இரண்டில் ஏதேனும் ஒன்றை நாடியே இருக்கும். எனினும் துணிவின்றி இருக்கும். இங்குத் தலைவனுக்கு ஐயம் வந்ததோ இல்லையோ! ஐயம் வந்ததுபோல் வண்டிடம் கூறிக் கொள்கிறாள். எனினும் அவன் உள்ளம்

தலைவியின் கூந்தல் 'நறிய மணமுடையது' என்பதையே குறித்தமைகிறது. இதனையே 'நறியவும் உளவோ' என்று கூறுகின்றான்.

இவற்றால் ஐயம் தீர்ப்பதற்கென மூன்றாம் நபரை அழைக்கும் போது நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய வாழ்வியல் செய்திகளைக் குறுந் தொகையின் இரண்டாவது பாடல் நுட்பமாய்ச் சுட்டுவதை அறிய முடிகின்றது. இப்பாடலின் வழி நாம் கவனத்தில் கொள்ள வேண்டியன:

***அவரின் வாழ்க்கைப் பின்புலம்,***
***மறைபொருள் காக்கும் பண்பாடு,***
***நடுவுநிலைப் பண்பு,***
***துறைசார் அறிவு*** என்பனவாகும்.

இவற்றுடன் அந்நபர் மேலும் அறிந்திருக்க வேண்டிய செய்திகள்:

***இவருக்கும் இடையிலா உறவு,***
***அவர்களின் பண்புகள்***
என்பனவாகும்.

இதன்வழி இப்பாடல் வாழ்வியல் விளக்கமாகவும் உளவியல் கருத்துக் களஞ்சிய மாகவும் அமைவதைக் கண்டு வியக்கலாம்.

(சாரலில் மீண்டும் நனைவோம்...)

முனைவர் த. கண்ணன்
தமிழ் விரிவுரையாளர்

அறிவிப்பு:

# *பயிலரங்கம்*

சென்னை, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் நிதி நல்கையுடன் கே.எஸ்.ஆர். கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறை நடத்தும் பத்துநாள் பயிலரங்கம், ***'தொல்காப்பியம் கற்பித்தல் உத்திகள்'*** என்ற பொருண்மையில் 21.01.2013 முதல் 30.01.2013 வரை நிகழ உள்ளது. பின்வரும் வல்லுநர்கள் இதில் பங்கேற்றுப் பயிற்றுரையாற்ற உள்ளனர்.

***முனைவர் செ.வை. சண்முகம் அவர்கள், சிதம்பரம்.***
***முனைவர் பெ. மாதையன் அவர்கள், விருத்தாசலம்.***
***முனைவர் டி. மூர்த்தி அவர்கள், உத்திரப்பிரதேசம்***
***முனைவர் டி. விஷ்ணுகுமரன் அவர்கள், ஆந்திரப்பிரதேசம்.***
***முனைவர் தமிழவன் அவர்கள், பெங்களூரு.***
***முனைவர் இரா. சம்பத் அவர்கள், புதுச்சேரி.***
***முனைவர் க. பஞ்சாங்கம் அவர்கள், புதுச்சேரி.***
***முனைவர் ச. திருஞானசம்பந்தம் அவர்கள், திருவையாறு.***
***முனைவர் இரா. சீனிவாசன் அவர்கள், சென்னை.***
***முனைவர் அ. சீனிவாசன் அவர்கள், மதுரை.***
***முனைவர் இ. சூசை அவர்கள், திருச்சி.***

*முனைவர் நா. முத்துமோகன் அவர்கள், மதுரை.*
*முனைவர் ந. தெய்வசுந்தரம் அவர்கள், சென்னை.*
*முனைவர் சு. இராசாராம் அவர்கள், காரைக்குடி.*
*முனைவர் பி. பழனிவேல் அவர்கள், கிருஷ்ணகிரி.*
*முனைவர் ஆர். ஜெயராமன் அவர்கள், வேலூர்.*
*முனைவர் எம். கிருபாகரன் அவர்கள், கோவை.*
*முனைவர் ப. மதிவாணன் அவர்கள், திருச்சி.*
*முனைவர் து. சேதுபாண்டியன் அவர்கள், மதுரை.*
*முனைவர் வீ. பாலமுருகன் அவர்கள், சென்னை.*

இப்பயிலரங்கில் கல்லூரிப் பேராசிரியர்களும் இலக்கணத்தில் முனைவர் பட்ட ஆய்வு மேற்கொள்ளும் ஆய்வாளர்களும் பங்கேற்கலாம்.

**தொடர்புக்கு:**

**முனைவர் மா. கார்த்திகேயன்,**
**கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர், 9894953535.**

## விடியலுக்கு வந்த மடல்

‘விடியல்’ மாத இதழை வாசித்தேன். வாழ்க்கைக்குத் தேவையான அனைத்துக் கூறுகளுடன் இதழ் வெளிவந்துள்ளது. மாணாக்கர்களை அறிவுறுத்தி, அறிவூட்டி, களிப்பூட்டி வரும் இவ்இதழின் பணிகள் மகிழ்ச்சியைத் தருகிறது.

‘இதுவும் கடந்துபோகும்’ என்பதை ஒவ்வொருவரும் உணரின் வாழ்வில் பிரச்சனையே நிகழா! குருவின் மேன்மையினை ‘நம்பிக்கையின் பலம்’ எனும் தலைப்பிலான சிந்தனைக் கதை புலப்படுத்துகிறது.

‘அடிக்கடிப் பார்க்கிற யாரையும் நேசிக்க முடியாது. ஆனால், நேசிக்கிற யாரையும் அடிக்கடிப் பார்க்க முடியாது’ என்ற கவிதைக் கருத்து ‘வாழ்க்கை அப்படித்தான்’ என்பது சரியே என்பதை உணர வைக்கிறது. நீரழிவுநோய் குறித்த கட்டுரை, சங்கச்சாரல், ஜி.என்.பி., வள்ளியப்பா பற்றிய வாழ்வியல் செய்திகள் எனத் தரமான சிந்தனைகளைத் தொகுத்து அளித்துள்ள பாங்கு பாராட்டிற்குரியது. வெளிவந்துள்ள மாணாக்கர்களின் அனைத்துக் கவிதைகளும் அவர்களின் கற்பனை, மொழி, வெளிப்படுத்தும் பாங்கினைப் புலப்படுத்துகின்றன. அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவிக்க மனம் எண்ணுகிறது. மகிழ்கிறது. தொடரட்டும் இதழ்ப்பணி.

அன்பன்,

*முனைவர் ச. ஈஸ்வரன்,*
*தமிழ் இணைப்பேராசிரியர்,*
*தேசியக் கல்லூரி, திருச்சி – 1.*